**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**C.C. No.383/2017**

**வழக்கு சாட்சி – அ.சா. 7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாண்டியன் | ஜாதி | |
| தந்தை பெயர் | முனியாண்டி | தொழில் | தனியார் நிறுவனத்தில் வேலை |
| கிராமம் | தேனி | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | தேனி | வயது | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2025.

**( 1வது எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை:–</u>**

எதிரிகளை எனக்குத் தெரியும். அசா6 எனது தகப்பனார். கடந்த 2012 ம் வருடம் எங்களுக்கு ஏற்கனவே தெரிந்த விக்டர் ராஜா என்பவர் மூலம் வனராஜ், காமராஜ், கவிதா, பரிமளா ஆகியோர்களை தெரியவந்தது. கடந்த 2012 ம் வருடம் தேதி மாதம் தற்போது ஞாபகம் இல்லை ஒருநாள் எதிரிகள் எங்களிடம் எங்களுக்கு ராணுவத்தில் பெரிய அதிகாரிகளைத் தெரியும், அவர்களை வைத்து நாங்கள் உங்களுக்கு வேலை வாங்கித் தருகிறோம் என்று கூறினார்கள். Physical, Medical test எதுவுமே வேண்டாம், ரூ.2,00,000/– பணம் கொடுத்தால் போதும் என்று கூறினார்கள். கடந்த 2012 ம் வருடம் மார்ச் மாதம் தேதி தற்போது ஞாபகம் இல்லை எதிரிகள் என்னுடன் சுமார் 10 நபர்களையும், ஊட்டிக்கு ராணுவ ஆள்சேர்ப்பு தேர்விற்காக அழைத்துச் சென்றார்கள். அங்கு ஒரு லாட்ஜில் 2 நாட்கள் தங்கியிருந்தோம். அதன்பிறகு 5 மாதங்கள் கழித்து வேலை குறித்து எங்களுக்கு எந்த தகவலும் வரவில்லை. நாங்கள் எதிரிகளிடம் கேட்ட போது காத்திருக்குமாறு கூறினார்கள். பின்னர்

எதிரிகள் எங்களிடம் 2013ம் வருடம் ஜனவரி மாதம் தேதி தற்போது ஞாபகம் இல்லை ஒருநாள் ராணுவ பணித்தேர்வு நடப்பதாக கூறினார்கள். அதற்காக கோயம்புத்தூருக்கு நானும், என்னுடன் சுமார் 10 நபர்களும் வனராஜ் ஏற்கனவே கோயம்புத்தூரில் யாரோ ஒரு நபரிடம் எங்களது வருகை குறித்து கூறியிருப்பதாகவும், அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்றும் கூறினார். நாங்கள் அதைக் கேட்டு தேர்விற்காக அங்கு சென்றோம். தேர்வில் பங்கேற்றுவிட்டு நாங்கள் வீட்டிற்கு வந்து 5 மாதம் கழித்து எதிரிகளிடம் பணி பற்றி கேட்டபோது, எதிரிகள் எங்களிடம் அனைத்து வேலைகளும் முடிந்துவிட்டது, பணி நியமன உத்தரவு விரைவில் வந்துவிடும் என்று கூறினார்கள். அதன்பின்னர் சிறிது நாட்கள் காத்திருந்த பின்னர் பணி உத்தரவு கிடைக்காததால் எதிரிகளிடம் நாங்கள் நேரில் சென்று பணம் குறித்து கேட்டபோது, பணம் தரமுடியாது, நீங்கள் எங்கு வேண்டுமானாலும் சென்று சொல்லிக்கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அதன்பின்னர் எதிரிகளைத் தொடர்பு கொள்ளமுடியவில்லை. அது குறித்து காவல் நிலையம் சென்று நாங்கள் புகார் கொடுத்தோம். அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:—</u>**

எதிரி தரப்பில் சாட்சியை விசாரணை செய்ய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.